**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி**

முன்னிலை : செல்வி ***V.***பார்கவி,***B.A.B.L.,L.L.M.,***
மாவட்ட உரிமையியல் நீதிபதி, சீர்காழி
-------

2021-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 13ம் நாள் திங்கட்கிழமை
திருவள்ளுவராண்டு 2052, பிலவ வருடம் கார்த்திகை மாதம் 27ஆம்நாள்
------

**<u>அசல் வழக்கு எண்.63/2012 ல் இடைமனு எண். 01/2021</u>**

1. கிருஷ்ணம்மாள் ( இறந்தார் ) ..வாதி
2. இராமகிருஷ்ணன் சார்பாக அவரது அதிகாரம் பெற்ற முகவர் சுவாமிநாதன் ..மனுதாரர்/2-ம்வாதி
3. சீத்தா ..இறந்த 1-ம் வாதியின் வாரிசு/ புதிய தரப்பினராக சேர்க்க வேண்டிய நபர்

...எதிர்...

1. பாலசுந்தர்
2. பாபு ..எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மனு இந்நீதிமன்றத்தில் என்முன்பாக 25.11.2021 அன்று இறுதியாக விசாரணைக்கு எடுக்கப்பட்டு மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு. எஸ். சுந்தரய்யா அவர்களும், 1-ம் எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு ஆர். ஆத்மநாதன் அவர்களும் ஆஜராகியும், 2ம்எதிர்மனுதாரரை அழைக்கப்பட்டு ஆஜரின்மையால் தோன்றாத்தரப்பினர் ஆக்கப்பட்டும், இருதரப்பு வாதுரைகளைக் கேட்டும், வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தும் இன்று இந்நீதிமன்றம் கீழ்க்கண்டவாறு வழங்கும்.

**<u>உத்தரவு</u>**

இறந்த 1-ம் மனுதாரரின் வாரிசுகளை சேர்ப்பதற்கான வாரிசு மனுவை உரிய காலத்தில் தாக்கல் செய்யாததால் பிறப்பிக்கப்பட்ட அறவு உத்தரவை நீக்கரவு செய்து உத்தரவிடக்கோரி மனுதாரரால் இம்மனு உ.வி.மு.ச.கட்டளை 22, விதி 9-ன்படி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. **<u>மனுவின் சுருக்கம்</u>**

அசல் வழக்கானது எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கு எதிராக விளம்பல் பரிகாரமும், சுவாதீன மீட்பு பரிகாரமும் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வழக்கு நிலுவையில் உள்ள நிலையில் 1-ம் வாதி கடந்த 10.02.2017 அன்று இறந்துவிட்டார். இறந்த 1-ம் வாதிக்கு ராமகிருஷ்ணன், சிவா மற்றும் சீத்தா ஆகியோர் வாரிசுகளாவார்கள். இவர்களில் சிவா கடந்த 04.07.2007 அன்று இறந்துவிட்டார். இறந்த 1-ம் வாதிக்கு தற்போது வாரிசுகளாக ராமகிருஷ்ணன் மற்றும் சீத்தா இருவர் மட்டுமே உயிரோடு உள்ள

நிலையில் ராமகிருஷ்ணன் ஏற்கனவே வழக்கில் 2-ம் வாதியாக உள்ளார். இறந்த 1-ம் வாதியின் மகளான 3-ம் மனுதாரரை அசல் வழக்கில் 3-ம் வாதியாக சேர்க்க வேண்டியது அவசியமானது. இறந்த 1-ம் வாதிக்கு 2,3 மனுதாரர்கள் மட்டுமே வாரிசுதாரர்கள் ஆவார்கள். 1-ம் வாதியின் எல்லா செத்துக்களுக்கும் வரவேண்டிய தொகையை வசூலித்து அடையவும் உரிமை உள்ளவர்கள், தாவா சொத்துக்கும் உரிமை உள்ளவர்கள். இறந்த 1-ம் வாதியின் வாரிசு சேர்க்கும் மனுவை அவர் இறந்த 10.02.2017ம் தேதியிலிருந்து 90 நாட்களுக்குள் 10.05.2017-க்குள் தாக்கல் செய்ய வேண்டும். 2-ம் மனுதாரருக்கு கடந்த 10.04.2017 முதல் கடுமையான மஞ்சள் காமாலை நோய் ஏற்பட்டு வீட்டிலேயே படுத்த படுக்கையாக இருந்தார். தற்போது நாட்டு வைத்தியம் பார்த்து 2-ம் மனுதாரருக்கு உடல்நிலை சரியானது. எனவே அசல் வழக்கில் இறந்த 1-ம் வாதியின் வாரிசுகளை உரிய காலத்தில் சேர்க்காததால் வழக்கானது அறவு செய்யப்பட்டுள்ளது. அந்த அறவு செய்யப்பட்ட உத்தரவை நீக்கரவு செய்ய வேண்டியது அவசியமானது. எனவே இறந்த 1-ம் மனுதாரரின் வாரிசு மனுவை உரிய காலத்தில் தாக்கல் செய்யாததால் அறவு செய்யப்பட்ட உத்தரவை நீக்கரவு செய்து உத்தரவிடக்கோரி மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள இம்மனுவை அனுமதிக்க வேண்டும்.

3. **<u>1-ம் எதிர்மனுதாரர் தரப்பு எதிருரைச்சுருக்கம்</u>**

மனு சட்டப்படியும், நியாயப்படியும் நிலைநிற்கத்தக்கதல்ல. 1-ம் வாதி கிருஷ்ணம்மாள் 10.02.2017-ம் தேதியன்று இறந்துவிட்டார் என்பது உண்மை. இறந்த 1-ம் வாதிக்கும் அவரது கணவர் சிவசிதம்பரத்திற்கும் ராமகிருஷ்ணன், சிவா என்ற மகன்களும், சீத்தா என்ற மகளும் வாரிசுதாரர்கள். ஏற்கனவே சிவசிதம்பரம் இறந்துவிட்டார். இறந்த 1-ம் வாதிக்கு ராமகிருஷ்ணன், சிவா, சீத்தா ஆகியோர்கள் வாரிசுதாரர்கள். இறந்த 1-ம் வாதியின் மகனான சிவா கடந்த 04.07.2007-ல் இறந்துவிட்டார். 1-ம் வாதியின் மகனான சிவாவுக்கு கலா என்ற மனைவியும், 2-ம்பிரதிவாதியான பாபு என்ற மகனும் வாரிசுதாரர்கள். தற்போது கலாவும் இறந்துவிட்டார். இறந்த 1-ம் வாதிக்கு இறந்த அவரது மகனான சிவாவின் மகனான 2-ம் பிரதிவாதி வாரிசுரிமை சட்டப்படி வாரிசுதாரர் ஆவார். இறந்த 1-ம் வாதிக்கு ராமகிருஷ்ணன், சிவா மற்றும் சீத்தா மட்டுமே வாரிசுதாரர்கள் என்று கூறுவது தவறு. இறந்த 1-ம் வாதிக்கு 2-ம் பிரதிவாதியும் ஒரு வாரிசுதாரர். எனவே இறந்த 1-ம் வாதிக்கு உரிய வாரிசை சேர்த்து இந்த மனு தாக்கல் செய்யாததால் இம்மனு நிலைநிற்கத்தக்கதல்ல. 1-ம் வாதியின் சொத்துக்களுக்கு 2-ம் பிரதிவாதியும் வாரிசுதாரர் ஆவார். இந்த வழக்கில் 3-ம்மனுதாரர் சீத்தாவை வாரிசாக சேர்க்க இயலாது. இறந்த 1-ம் வாதிக்கு உரிய காலத்தில் வாரிசு சேர்க்காததால் வழக்கு அறவு செய்யப்பட்டுள்ளது. இறந்த 1-ம் வாதிக்கு 90 நாட்களுக்குள் வாரிசு மனு தாக்கல் செய்ய

வேண்டும். காலதாமதத்திற்கு ஒவ்வொரு நாளுக்கும் உரிய காரணம் சொல்லப்படவேண்டும். அவ்வாறு உரிய காரணம் சொல்லாத காரணத்தினால் இம்மனுவை 1-ம் எதிர்மனுதாரரின் செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும்.

4. **<u>இம்மனுவில் தீர்வுக்குரிய பிரச்சனை</u>**

1. மனுதாரர்/2-ம் வாதி தாக்கல் செய்துள்ள இம்மனு அனுமதிக்கத்தக்கதா?

5. இம்மனுவில் மனுதாரர்கள் மற்றும் எதிர்மனுதாரர்கள் இருதரப்பிலும் சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை, சான்றாவணங்கள் குறியீடு செய்யப்படவில்லை.

6. **<u>தீர்வு</u>**

மனுதாரர்கள் அசல் வழக்கானது எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கு எதிராக விளம்பல் பரிகாரமும், சுவாதீன மீட்பு பரிகாரமும் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், வழக்கு நிலுவையில் உள்ள நிலையில் 1-ம் வாதி கடந்த 10.02.2017 அன்று இறந்துவிட்டார் என்றும், இறந்த 1-ம் வாதிக்கு ராமகிருஷ்ணன், சிவா மற்றும் சீத்தா ஆகியோர் வாரிசுகளாவார்கள் என்றும், இவர்களில் சிவா கடந்த 04.07.2007 அன்று இறந்துவிட்டார் என்றும், இறந்த 1-ம் வாதிக்கு தற்போது வாரிசுகளாக ராமகிருஷ்ணன் மற்றும் சீத்தா இருவர் மட்டுமே உயிரோடு உள்ள நிலையில் ராமகிருஷ்ணன் ஏற்கனவே வழக்கில் 2-ம் வாதியாக உள்ளார் என்றும், இறந்த 1-ம் வாதியின் மகளான 3-ம் மனுதாரரை அசல் வழக்கில் 3-ம் வாதியாக சேர்க்க வேண்டியது அவசியமானது என்றும், இறந்த 1-ம் வாதிக்கு 2,3 மனுதாரர்கள் மட்டுமே வாரிசுதாரர்கள் என்றும், 1-ம் வாதியின் எல்லா செத்துக்களுக்கும் வரவேண்டிய தொகையை வசூலித்து அடையவும் , தாவா சொத்துக்கும் உரிமை உள்ளவர்கள் என்றும், இறந்த 1-ம் வாதியின் வாரிசு சேர்க்கும் மனுவை அவர் இறந்த 10.02.2017ம் தேதியிலிருந்து 90 நாட்களுக்குள் 10.05.2017-க்குள் தாக்கல் செய்திருக்க வேண்டும் என்றும், 2-ம் மனுதாரருக்கு கடந்த 10.04.2017 முதல் கடுமையான மஞ்சள் காமாலை நோய் ஏற்பட்டு வீட்டிலேயே படுத்த படுக்கையாக இருந்து நாட்டு வைத்தியம் பார்த்து 2-ம் மனுதாரருக்கு உடல்நிலை சரியானது என்றும், எனவே அசல் வழக்கில் இறந்த 1-ம் வாதியின் வாரிசுகளை உரிய காலத்தில் சேர்க்காததால் வழக்கானது அறவு செய்யப்பட்டுள்ளது என்றும், அந்த அறவு செய்யப்பட்ட உத்தரவை நீக்கரவு செய்ய வேண்டியது அவசியமானது என்றும், எனவே இறந்த 1-ம் மனுதாரரின் வாரிசு மனுவை உரிய காலத்தில் தாக்கல் செய்யாததால் அறவு செய்யப்பட்ட உத்தரவை ரத்து செய்து உத்தரவிடக்கோரி மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள இம்மனுவை அனுமதிக்க வேண்டும் என்றும் வாதம் செய்யப்பட்டது.

7. 1-ம் எதிர்மனுதாரர் தரப்பில் 1-ம் வாதி கிருஷ்ணம்மாள் 10.02.2017-ம் தேதியன்று இறந்துவிட்டார் என்பது உண்மை என்றும், இறந்த 1-ம் வாதிக்கும் அவரது கணவர் சிவசிதம்பரத்திற்கும் ராமகிருஷ்ணன், சிவா என்ற மகன்களும், சீத்தா என்ற மகளும் வாரிசுதாரர்கள் என்றும், ஏற்கனவே சிவசிதம்பரம் இறந்துவிட்டார் என்றும், இறந்த 1-ம் வாதிக்கு ராமகிருஷ்ணன், சிவா, சீத்தா ஆகியோர்கள் வாரிசுதாரர்கள் என்றும், இறந்த 1-ம் வாதியின் மகனான சிவா கடந்த 04.07.2007-ல் இறந்துவிட்டார் என்றும், 1-ம் வாதியின் மகனான சிவாவுக்கு கலா என்ற மனைவியும், 2-ம்பிரதிவாதியான பாபு என்ற மகனும் வாரிசுதாரர்கள் என்றும், தற்போது கலாவும் இறந்துவிட்டார் என்றும், இறந்த 1-ம் வாதிக்கு இறந்த அவரது மகனான சிவாவின் மகனான 2-ம் பிரதிவாதி வாரிசுரிமை சட்டப்படி வாரிசுதாரர் ஆவார் என்றும், இறந்த 1-ம் வாதிக்கு ராமகிருஷ்ணன், சிவா மற்றும் சீத்தா மட்டுமே வாரிசுதாரர்கள் என்று கூறுவது தவறு என்றும், இறந்த 1-ம் வாதிக்கு 2-ம் பிரதிவாதியும் ஒரு வாரிசுதாரர் என்றும், எனவே இறந்த 1-ம் வாதிக்கு உரிய வாரிசை சேர்த்து இந்த மனுவைத் தாக்கல் செய்யவில்லை என்றும், . 1-ம் வாதியின் சொத்துக்களுக்கு 2-ம் பிரதிவாதியும் வாரிசுதாரர் என்றும், இந்த வழக்கில் 3-ம்மனுதாரர் சீத்தாவை வாரிசாக சேர்க்க இயலாது என்றும், இறந்த 1-ம் வாதிக்கு உரிய காலத்தில் வாரிசு சேர்க்காததால் வழக்கு அறவு செய்யப்பட்டுள்ளது என்றும், இறந்த 1-ம் வாதிக்கு 90 நாட்களுக்குள் வாரிசு மனு தாக்கல் செய்ய வேண்டும் என்றும், காலதாமதத்திற்கு ஒவ்வொரு நாளுக்கும் உரிய காரணம் கூறப்படவேண்டும் என்றும், அவ்வாறு உரிய காரணம் சொல்லாத காரணத்தினால் இம்மனுவை தள்ளுபடி செய்ய வேண்டுமென்றும் வாதம் செய்யப்பட்டது.

8. இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டன. வழக்கு கோப்புகள் பரிசீலிக்கப்பட்டன. மனுதாரர்கள் தரப்பில் இறந்த 1-ம் வாதியின் வாரிசாக 3-ம் மனுதாரரை உரிய காலத்தில் சேர்க்காததால் 1-ம் வாதியைப் பொறுத்து அறவு செய்யப்பட்ட உத்தரவை நீக்கரவு செய்ய வேண்டுமென இம்மனுவில் கோரப்பட்டுள்ளது. இம்மனுவில் 2-ம் எதிர்மனுதாரர் ஆஜரின்மையால் தோன்றாத்தரப்பினர் ஆக்கப்பட்டுள்ளார். 1-ம் எதிர்மனுதாரர் தரப்பில் இறந்த 1-ம் வாதியின் வாரிசு உரிய காலத்தில் சேர்க்காத ஒவ்வொரு நாளுக்கும் உரிய விளக்கம் அளிக்கப்படவில்லை என்றும், இறந்த 1-ம் வாதிக்கு 2-ம் எதிர்மனுதாரரும் வாரிசு என்றும் மனுவை தள்ளுபடி செய்ய வேண்டும் என்றும் கட்சி செய்யப்பட்டுள்ளது.

9. அசல் வழக்கின் 1-ம் வாதி 10.02.2017 அன்று இறந்துவிட்டார் எனபதைப் பொறுத்தும், இறந்த 1-ம் வாதிக்கு 2,3 மனுதாரர்கள் மற்றும் சிவா என்பவரும் வாரிசுகள் என்பதைப் பொறுத்தும் 1-ம்

எதிர்மனுதாரர் தரப்பில் எவ்விதமான ஆட்சேபணையும் செய்யப்படவில்லை. 1-ம் எதிர்மனுதாரர் தரப்பில் இறந்த 1-ம் வாதிக்கு இம்மனுவின் 2-ம் எதிர்மனுதாரரும் வாரிசுதாரர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. வழக்கின் கோப்புக்களை பரிசீலனை செய்ததில் அசல் வழக்கானது 1,2 மனுதாரர்கள்/ வாதிகள் 1,2 எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கு எதிராக தாவா சொத்தைப்பொறுத்து இறந்த சிவசிதம்பரம் வாதிகளுக்கு வழங்கிய குத்தகைசீட்டுபடி வாதிகள் குத்தகை சாகுபடிதாரர்கள் என்று விளம்பல் பரிகாரமும், அதை ஒட்டி தாவா சொத்தினை 1,2 எதிர்மனுதாரர்கள்/ பிரதிவாதிகள் காலிசெய்து 1,2 மனுதாரர்கள்/ வாதிகள் வசம் சுவாதீனம் ஒப்படைக்க வேண்டுமெனவும், தாவா சொத்தைப்பொறுத்து 1-ம் எதிர்மனுதாரர் 2-ம் எதிர்மனுதாரருக்கு 09.06.2010 அன்று செய்து கொடுத்த கிரய சாசன ஆவணம் சட்டப்படி செல்லாது அது 1,2 மனுதாரர்களை கட்டுப்படுத்தாது என்று விளம்பல் பரிகாரமும் கோரி தாககல் செய்யப்பட்டுள்ளது. எனவே 1-ம் வாதிக்கு 2-ம் எதிர்மனுதாரர் பாபு வாரிசாக இருந்தாலும் 2-ம் எதிர்மனுதாரர் ஏற்கனவே இவ்வழக்கில் தரப்பினராக உள்ள நிலையில் 2-ம் எதிர்மனுதாரரை மீண்டும் வழக்கில் சேர்க்க வேண்டிய அவசியமில்லை என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. மனுதாரர் இந்த மனுவில் இறந்த 1-ம் வாதியின் வாரிசுகளை உரிய காலத்தில் சேர்க்காததால அறவு செய்யப்பட்ட உத்தரவை நீக்கரவு செய்ய வேண்டுமென இம்மனுவில் கோரப்பட்டுள்ளது.

10. இறந்த 1-ம் வாதியின் வாரிசுகளை உரிய காலத்தில் சேர்க்காமல் ஏற்பட்ட 812 நாட்கள் காலதாமதத்தை மன்னிக்கக்கோரி மனுதாரர்கள் இடைமனு எண்.954/2019 தாக்கல் செய்து அந்த மனுவானது மனுதாரர்கள் செலவுத்தொகை கொடுக்க வேண்டுமென்ற நிபந்தனையுடன் 06.09.2021 அன்று அனுமதிக்கப்பட்டுள்ளது. இது விசாரணை நீதிமன்றமாக இருப்பதால் தரப்பினர்களுக்கு வழக்கை நடத்த போதிய வாய்ப்பு வழங்குவது அவசியமானது என்று கருதியும், அவ்வாறு இம்மனுவை அனுமதிப்பதால் வழக்கின் மீது ஏற்படும் பல்வேறு மேல் நடவடிக்கைகளையும் ( Multiciplity of proceedings) காலதாமதத்தையும் குறைக்கும் என்று கருதியும் இறந்த 1-ம் வாதியின் வாரிசாக 3-ம் மனுதாரரை 3-ம்வாதியாக சேர்க்க உரிய காலத்தில் மனுத்தாக்கல் செய்யாமல் அறவு செய்யப்பட்ட உத்தரவை நீக்கரவுசெய்யக்கோரி மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள இம்மனுவை அனுமதித்து உத்தரவிடுவதே நீதியின் நலனுக்கு உகந்ததாக இருக்கும் என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. அவ்வாறு இம்மனுவை அனுமதிப்பதால் இம்மனுவில் ஆஜராகி கட்சி செய்துள்ள 1-ம் எதிர்மனுதாரருக்கு ஏற்படும் இழப்பை ஈடு செய்யும் வகையில் செலவுத்தொகை அளித்து

உத்தரவிடலாம் என்று இந்நீதிமன்றம் முடிவு செய்து அவ்வாறு இம்மனுவின் பிரச்சினைக்கு தீர்வு காணப்படுகிறது.

11. முடிவில் மனுதாரர்கள் 1-ம் எதிர்மனுதாரருக்கு இம்மனுவின் செலவுத்தொகையான ரூபாய் 500/-யை (ரூபாய் ஐந்நூறு மட்டும்) வருகிற 16.12.2021-ம் தேதிக்குள் கொடுக்கும்பட்சத்தில் இம்மனு அனுமதிக்கப்படும் என்றும், தவறும்பட்சத்தில் இம்மனு தானாகவே தள்ளுபடியாகிவிடும் என்றும் உத்தரவிடப்படுகிறது. அழைக்க - 17.12.2021.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு அவரால் கணிப்பொறியில் நேரடியாகத் தட்டச்சு செய்யப்பட்டதை என்னால் சரிபார்க்கப்பட்டு பிழைதிருத்தம் செய்யப்பட்டு 2021-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 13-ம் நாள் என் கையொப்பம் இடப்பட்டு திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

மாவட்ட உரிமையியல் நீதிபதி, சீர்காழி.

<u>பின் இணைப்பு</u>

| | |
|---|---|
| <u>மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள்</u> | - இல்லை- |
| <u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள்</u> | - இல்லை- |
| <u>மனுதாரர்கள் தரப்பு சான்றாவணங்கள்</u> | -இல்லை- |
| <u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சான்றாவணங்கள்</u> | -இல்லை- |

மா.உ.நீ.

நேரிய/வரைவு உத்தரவு
அசல் வழக்கு எண்.63/2012-ல்
இடைமனு எண். 01/2021
நாள் - 13.12.2021.